APRIL/MAY 2025

FTA42/CTA42/BTA42 — (இலக்கணம் — 4)
தண்டியலங்காரம் (பொருளணியியல் மட்டும்)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஓரிரு சொல் / சொற்றொடரில் விடை தருக.

1. தண்டியலங்காரம் நூலின் ஆசிரியர் யார்?

2. தன்மை அணியின் வகைகளைச் சுட்டுக.

3. உருவக அணி என்றால் என்ன?

4. தீவகம் – சொற்பொருள் தருக.

5. வேற்றுப்பொருள் வைப்பணி இலக்கணம் யாது?

6. ஒட்டணியின் வேறு பெயர்களைக் கூறுக.

7. ஏதுவணியை விளக்கி, அதன் இருவகைகளைக் சுட்டுக.

8. ஆர்வமொழியணி – குறிப்பு வரைக.

Shanmuga Industries Arts & Science College
T.V.Malai

9. ஒப்புமைக் கூட்ட அணியின் இருவகைகளைக் குறிப்பிடுக.

10. பாவிக அணியின் பண்பைக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) குணத்தன்மை அணியை விளக்குக.

(அல்லது)

(ஆ) சாதித்தன்மை அணியின் சிறப்பினை இயம்பிடுக.

12. (அ) முதனிலைத் தீவக அணி வகைகளை உரைத்திடுக.

(அல்லது)

(ஆ) பின்வருநிலை அணி குறித்தெழுதுக.

13. (அ) விபாவனை அணியை விளக்கிக் கூறுக.

(அல்லது)

(ஆ) தற்குறிப்பேற்றம் நிகழும் இடங்களை எடுத்துரைக்க.

14. (அ) பரியாயம் அணி குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) அவநுதி அணியின் தன்மையை இயம்புக.

Shanmugha Industries Arts & Science College T.V.Malai

15. (அ) விசேட அணியையும், அதன் வகைகளையும் விளக்குக.

(அல்லது)

(ஆ) மாறுபடு புகழ்நிலைக்கும், புகழாப் புகழ்ச்சிக்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் ஒவ்வொன்றிற்கும் விடையளிக்க.

16. உவமை அணியின் இலக்கணம் கூறி, வகைகளை விளக்கி வரைக.

17. முன்ன விலக்கணியை விளக்கிக் கூறுக.

18. வேற்றுமை அணியை விளக்கி, அதன் வகைகளைச் சான்றுகளுடன் இயம்பிடுக.

19. சுவையணியின் வகைகள் குறித்துக் கட்டுரைக்க.

20. சிலேடை அணியின் இலக்கணம் கூறி, அதன் வகைகள் குறித்தெழுதிடுக.

———————